# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone: 044–2838 9038; email: registrar@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in


**Lr. No.TNTEU/R/Elig./M.Ed Admission 2018-19/252** **Date: 14.09.2018**

முனைவர் நா.இரவீந்திரநாத் தாகூர், Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்
முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 – எம்.எட் சேர்க்கை – பல்கலைக்கழக இணைவு பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - எம்.எட் சேர்க்கை கடைசி நாள் மற்றும் அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்புப் பணிகள் கால அட்டவணையில் மாறுதல் அறிவித்தல் - தொடர்பாக.

பார்வை: 1. இப்பல்கலைக்கழக கடித எண்:TNTEU/R/Elig./M.Ed Admission 2018-19/244, நாள் 10.09.2018.
2. இப்பல்கலைக்கழக கடித எண்: TNTEU/R/Elig./M.Ed Admission 2018-19/250, நாள் 11.09.2018.

-------

பார்வையில் கண்ட இப்பல்கலைக்கழகக் கடிதங்கள் வாயிலாக, நடப்புக் கல்வியாண்டில் (2018-2019) எம்.எட் பட்டப்படிப்பில் சேர்க்கை பெற கடைசி நாள் 17.09.2018 ஆம் தேதி என்றும், மாணவர்களது அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்புப் பணிகள் 28.09.2018, 01.10.2018 மற்றும் 03.10.2018 ஆகிய நாட்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தன. ஆனால், எம்.எட் பட்டபடிப்புக்கான 10 தகுதிவாய்ந்த ஆசிரியர்களுக்குத் தகுதி ஒப்புதல் (Staff approval order) பல்கலைக்கழத்திலிருந்து இதுவரை பெறாத சுயநிதி கல்வியியல் கல்லூரிகளுக்கு மேலும் அவகாசம் அளிக்கவேண்டியுள்ளதால், எம்.எட் சேர்க்கை தொடர்பான கால அட்டவணை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்படுகிறது.

## <u>கால அட்டவணை</u>

நடப்பு கல்வியாண்டில் எம்.எட் சேர்க்கைக்குக் கடைசி நாள்: } **28.09.2018 மாலை 5.45 மணி**

| தேதி | சான்றிதழ் சரிபார்ப்புக்கான கல்லூரிகள் இயங்கும் மாவட்டங்கள் |
|---|---|
| 03.10.2018 | கோயம்பத்துார், நீலகிரி, ஈரோடு, சென்னை, கன்னியாகுமரி, மதுரை, திருநெல்வேலி, துாத்துக்குடி, இராமநாதபுரம், தேனி, சிவகங்கை, திண்டுக்கல் |
| 04.10.2018 | விருதுநகர், கரூர், பெரம்பலுார், திருச்சி, நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, காஞ்சிபுரம், திருவள்ளுர், அரியலுார். |
| 05.10.2018 | தஞ்சாவூர், வேலுார், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, கடலுார், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர். |

மேற்கண்ட கால அட்டவணையைத் தவிர, பார்வையில் கண்ட கடிதங்களில் தெரிவித்திருந்த அனைத்து அறிவிப்புகளும் தொடர்கின்றன. எம்.எட் பட்டபடிப்புக்குத் தேவையான 10 தகுதிவாய்ந்த ஆசிரியர்களை நியமித்து, பல்கலைக்கழகத்திடமிருந்து தகுதி ஒப்புதல் பெறாமல், இயங்கும் சுயநிதி கல்வியியல் கல்லூரிகள், நடப்புக் கல்வியாண்டில் எம்.எட் பட்ப்படிப்பில் மாணவர்களைச் சேர்க்கை செய்யக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

14/9/18

பதிவாளர் (பொ)